# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 03 திங்கட்கிழமை 09.09.2024 கதிர் 357








# தமிழரசுக் கட்சி எடுத்த தீர்மானத்தில் திருத்தம் குறித்து விசேட குழு ஆராய்வு

## அடுத்த வாரம் இறுதி அறிக்கை வரும் என்கிறார் மாவை

'கட்சி எடுத்த தீர்மானத்திலும் இன்று நாங்கள் என்ன திருத்தங்களை மாற்றங்களை செய்ய வேண்டும் என்பது தொடர்பிலும் பேசியிருக்கிறோம். அதற்கு பொருத்தமான ஒரு அறிக்கை நாங்கள் வெளியிடுவோம். அந்த அறிக்கை அடுத்த வாரத்தில் வெளிவரும்' என்று தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

இன்று செவ்வாய்க்கிழமை வவுனியாவில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் விசேட குழு கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

6➤



# நல்லிணக்கத்துக்கான காரணத்தை ஜனாதிபதித் தேர்தல் அதிகரிக்கும்

## ஜெனிவாவில் நம்பிக்கை தெரிவித்த இந்தியா

இலங்கையில் நடைபெறவிருக்கும் தேர்தல் இலங்கையின் தேசிய நல்லிணக்கத்திற்கான காரணத்தை மேலும் அதிகரிக்கும் என்று இந்தியா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 57வது அமர்வின் போது இந்திய நிரந்தர தூதரகத்தின் ஆலோசகர் கௌரவ் குமார் தாக்கூர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

2009 முதல் இலங்கையின் நிவாரணம், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் புனரமைப்பு முயற்சிகளுக்கு இந்தியாவின் உறுதியான ஆதரவை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

அமர்வில் பேசிய தாக்கூர், 2022 ஆம் ஆண்டில் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் இந்தியாவின் பன்முக உதவியை எடுத்துரைத்தார், இது இலங்கைக்கு அதன் பொருளாதார சவால்களை சமாளிக்க உதவும் நோக்கத்தில் உள்ளது

கடன் மறுசீரமைப்பு விவாதங்களை இறுதி செய்வதில் இலங்கை அரசாங்கத்துடன் இந்தியாவின் ஒத்துழைப்பையும் அவர் குறிப்பிட்டார்.

“”ஒரு நெருங்கிய நண்பராகவும் அண்டை நாடாகவும், இந்தியா 2009 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் நிவாரணம், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் புனரமைப்பு செயல்முறைகளுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது. இந்தியாவும் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் இலங்கைக்கும் பலமுனை ஆதரவை வழங்கியுள்ளது. 2022 ஆம் ஆண்டில் மக்கள் அதன் பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்காக, பின்னர் கடன் மறுசீரமைப்பு விவாதங்களை இறுதி செய்வதில் இலங்கை அரசாங்கத்துடன் நெருக்கமாக பணியாற்றினார்கள்,” என்று அவர் கூறினார்.

இந்தியாவின் ஆதரவை வழிநடத்தும் இரண்டு அடிப்படைக் கொள்கைகளை தாக்கூர் வலியுறுத்தினார்: சமத்துவம், நீதி, கண்ணியம் மற்றும் அமைதிக்கான இலங்கைத் தமிழ் சமூகத்தின் அபிலாஷைகள் மற்றும் இலங்கையின் ஒற்றுமை, பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மை. மாகாண சபைகளுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு, மாகாண சபைத் தேர்தல்களை நடாத்துதல், இலங்கை அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துதல் போன்றவற்றின் ஊடாக இனப்பிரச்சினைக்கு விரிவான அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கண்காணிப்பாளருடன் சந்திப்பு



ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக இலங்கை வந்திருக்கும் ஐரோப்பியத் தேர்தல் கண்காணிப்புக் குழுவினருடன் இன்று காலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரை இன்று சந்தித்துப்பேசினார்கள்.

கொக்குவிலில் உள்ள முன்னணியின் தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், பேச்சாளர் சுகாஸ் கனரட்ணம் ஆகியோர் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

# சஜித்துக்கு ஆதரவான கூட்டம் ஆட்கள் இல்லாமையால் இரத்து



யாழ்ப்பாணம், வடமராட்சி - உடுப்பிட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து நடைபெறவிருந்த பிரசாரக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மக்களை அழைத்துவர முடியாது போன நிலையில் முற்பகல் 10 மணி முதல் இசைக் குழுவினர் பாடல் இசைத்தவண்ணம் இருந்துள்ளனர்.

நண்பகல் வரை மக்களை ஒன்றுதிரட்டுவதில் ஏற்பாட்டாளர்கள் தோல்வி கண்ட நிலையில் இந்தக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

# பால்மா விலை குறைகின்றது

இன்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் மில்கோ பால் மாவின் விலையை குறைக்கவுள்ளதாக மில்கோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 1 கிலோ பால் மா பொதி ஒன்றின் விலை 190 ரூபாவினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலைக்கு 2,585 ரூபாவாகும்.

400 கிராம் பொதி 75 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாகவும், அதன்படி அதன் புதிய விலை 1,050 ரூபா எனவும் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை

*அனைத்து அரசபாடசாலைகளும் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மூடப்படும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.*

*வாக்களிப்பு மற்றும் வாக்குகளை எண்ணும் நிலையங்களாக பயன்படுத்தப்படும் பாடசாலைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 24 வரை மூடப்பட்டிருக்குமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.*

# 80 எம்.பி.க்கள் நாட்டைவிட்டு வெளியேற தயார் நிலையில்

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் 80 முக்கிய அமைச்சர்கள்மற்றும்பாராளுமன்ற உறுப்பினர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தயாராகி வருவதாக ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பேச்சாளர்களாக செயற்பட்ட அமைச்சர்கள் மற்றும் முக்கிய நபர்கள் நாட்டை விட்டு வெளியேற உள்ளதாக கூறிய அவர் ரணில் விக்கிரமசிங்கவின் உண்மைத் தன்மையை அவர்கள் உணர்ந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை இழந்துவிட்டதாகவும், ஜனாதிபதியுடன் தொடர முடியாது என்பதை உணர்ந்து, தற்போது குறுக்கு வழியில் நிற்கின்றார்கள் என்றும், தமது செயற்பாடுகளுக்காக வருந்துகின்ற சிலர் உணர்ந்துள்ளனர்.

இவர்களில் சுமார் 80 பேர் ஏற்கனவே விசாவைப் பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவித்த அவர், ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாவலர் இல்லை என்பது தங்களுக்குத் தெளிவாகத் தெரிந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்கவின் வெற்றிக்காக செயற்படுவதற்கு மாத்திரமே ஜனாதிபதி அவர்களைப் பயன்படுத்துகின்றார் என்பதையும் குழு உணர்ந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ரஹ்மான் மேலும் தெரிவித்தார்.

# செல்லாக் காசுகளை விலைக்கு வாங்குமளவுக்கு ரணிலின் நிலை

## ரிஷாட் பதியூதீன்



செல்லாக்காசாகியுள்ள முன்னாள் உள்ளூராட்சி சபை மற்றும் மாகாண சபை உறுப்பினர்களை விலைக்கு வாங்குமளவுக்கு, ரணிலின் அரசியல் வங்குரோத்தடைந்துள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் விளக்கமளிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு கருத்து வெளியிட்ட அவர், "நாளுக்கு நாள் சஜித் பிரேமதாசவுக்கான ஆதரவு அதிகரித்து வருகிறது. கூட்டத்தில் பங்கேற்கச் செல்லும் இடங்களில் எல்லாம் முண்டியடித்துக்கொண்டு மக்கள் எங்களைச் சந்திக்கின்றனர். சிறந்த ஆட்சியை சஜித் பிரேமதாசவால்தான் தர முடியுமென்ற நம்பிக்கை நாட்டின் நாலா திசைகளுக்கும் பரவி வருகிறது. வெற்றி நிச்சயிக்கப்பட்டுள்ளதால், ரணில் விக்ரமசிங்க வேறு வழிகளைக் கையாளத் தொடங்கி உள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்கவை ஆதரிக்கும் வகையிலான கருத்துக்களை ரணில் வெளியிடுவது, வேறு சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது. அனுபவமில்லாத அனுர ஆட்சிக்கு வந்தால் ஆறு மாதங்களில் ஓடி விடுவாரென நினைக்கும் ரணில், மீண்டும் ஆட்சிக்கு வரத் தீட்டும் சதியே இது. பொய் பேசாத, வழங்கிய வாக்குறுதிகளைக் காப்பாற்றுகின்ற நேர்மையான அரசியல்வாதி சஜித். எனவே, நம்பிக்கையுடன் வாக்களித்து சஜித் பிரேமதாசவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யுங்கள்" என்று கூறினார்.

# சுன்னாகத்தில் விபத்து ஒருவரின் கால் துண்டிப்பு

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பகுதியில் மோட்டார் சைக்கிள்கள் மோதுண்ட விபத்தில் ஒருவரது கால் விரல்கள் துண்டான சம்பவம் இடம்பெற்றது.

காங்கேசன்துறை வீதியின் சுன்னாகம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரது கால்விரல்கள் மற்றொரு மோட்டார் சைக்கிளுக்குள் சிக்கி துண்டானது.

காயமடைந்தவர் நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். விபத்து தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# நெடுஞ்சாலையில் எரிந்த வாகனம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கொட்டாவை இடமாறும் பகுதியில் வாகனமொன்று இன்று செவ்வாய்க்கிழமை காலை தீப்பிடித்துள்ளது. இதனால் குறித்த பகுதியில் வாகன நெரிசல் ஏற்பட்டதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. தீயை தெற்கு அதிவேக நெடுஞ்சாலை தீயணைப்பு வீரர்கள் அணைத்துள்ளனர்.

தீயினால் கெப் வாகனம் தீக்கிரையாகியுள்ளதாக அத்துருகிரிய அதிவேக நெடுஞ்சாலை கட்டுப்பாட்டு மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது. இந்த தீ விபத்தில் கெப் வண்டியில் பயணித்தவர்களுக்கு காயங்கள் ஏதும் ஏற்படவில்லை.

கொழும்பு பிரதேசத்தில் உள்ள நிறுவனமொன்றின் பொறியியலாளர்கள் இருவர் காலி பிரதேசத்தில் வர்த்தகர்களுக்கான பயிற்சி பட்டறை ஒன்றை நடத்துவதற்காக சென்று கொண்டிருந்த போது, இந்த விபத்து இடம்பெற்றுள்ளது

வாகனத்தின் சுமார் 75 மூ தீயில் எரிந்து நாசமாகியுள்ளது. தீ விபத்து காரணமாக கடுவெலயிலிருந்து மாத்தறை நோக்கிச் சென்ற வாகனங்கள் சுமார் 15 நிமிடம் நிறுத்தப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

முல்லை ஒய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஒய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# ரணிலை வெல்ல வைப்பதற்காகவே சஜித்தை ஆதரிக்க தமிழரசு முடிவு

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பேச்சாளர் சுகாஸ்



நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வெல்ல வைப்பதற்கான ஒரு உபாயமாகவே, சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்ற முடிவை தமிழரசுக் கட்சி எடுத்துள்ளது என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஸ் கனகரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களிடம் பேசிய அவர், தென்னிலங்கையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கான சிங்கள - பௌத்த வாக்கு வங்கியை அதிகரிப்பதுதான் தமிழரசுக் கட்சியின் உண்மையான நிகழ்ச்சி நிரல் என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த சுகாஸ்,

"சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதென தமிழரசுக் கட்சி எடுத்த முடிவு, ரணில் விக்கிரமசிங்கவை வெல்ல வைப்பதற்காக முன்னெடுககப்படும் ஒரு உபாயமாகவே பார்க்கப்பட வேண்டும்.

சஜித்தை தமிழ் மக்கள் ஆதரிக்கின்றார்கள் என்ற கருத்துருவாக்கம் ஒன்றை ஏற்படுத்தி, தென்னிலங்கையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கான சிங்கள மக்களின் வாக்கு வங்கியை அதிகரிப்பதுதான் அவர்களுடைய உண்மையான நிகழ்ச்சி நிரல்.

இதனை உறுதிப்படுத்துவது போல, தமிழரசுக் கட்சியின் தலைவர் பகிரங்கமாக சஜித்தை ஆதரிப்பதாக அறிவித்துவிட்டு இரகசியமாக ரணிலுடன் கூடிக்குலாவி, பகிரங்கமாக அவரை வீட்டுக்கு அழைத்து பொன்னாடை போர்த்துகின்றார். மகன் பகலில் சஜித்துடனும், பின்னேரங்களில் பொது வேட்பாளருடனும் நிற்கின்றார். மாமியார் ரணிலை ஆதரிக்கின்றார். இப்படியாக ஒரு டீல் உச்சம் பெற்றுக்காணப்படுகின்றது.

இது ஒருபுறம் என்றால், அமறுபுறம் பொது வேட்பாளர் என்று இன்னொரு கோஷ்டி. இவர்களுடைய நிகழ்ச்சி நிரலும் சிங்கள - பௌத்த வேட்பாளர்களை வெல்ல வைப்பது. தமிழ் மக்கள் இந்த இடத்தில் விழிப்பாக இருக்க வேண்டும்" இவ்வாறு சுகாஸ் கனகரட்ணம் தெரிவித்தார்.



# சாவகச்சேரி இந்து கல்லூரி மாணவி கின்னஸ் சாதனை

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் க.பொ.த சாதாரண தரம் பயிலும் மாணவியான மாதங்கி கனகசுந்தரம் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

வேகமாக அதிக எண்ணிக்கையான பாதணிகளை அடுக்குதல் என்னும் தலைப்பின் கீழான போட்டியிலேயே இந்த சாதனையை படைத்துள்ளார்.

இணையத்தளம் ஊடாக விண்ணப்பித்து 10 பாதணிகளை ஒன்றன் மேல் ஒன்றாக 59 செக்கன்களில் அடுக்கி முடித்தே குறித்த சாதனையை புரிந்துள்ளார்.

கடந்த மே மாதம் 20 திகதி கொடிகாமத்தில் வீட்டில் இரு சாட்சிகள் முன்னிலையில் கின்னஸ் உலக சாதனை சட்டதிட்டங்களுக்கு அமைவாக குறித்த சாதனை நிகழ்வு காணொளியாக பதிவு செய்யப்பட்டு இணையத்தினுடாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

மூன்று மாதங்களின் பின; world guiness assesment commity மூலம் இதன் உண்மைத்தன்மை ஆராயப்பட்டு 28ஃ8ஃ2024 அன்று நிகழ்வு கின்னஸ் சாதனையாக அங்கீகரிக்கப்பட்டு அதற்கான சான்றிதழ் குறித்த மாணவிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த கின்னஸ் சாதனைக்கான விண்ணப்பம் முதல் அனைத்து விடயங்களையும் குறித்த மாணவியே தனது சுய முயற்சியில் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை கின்னஸ் சாதனை படைத்த மாணவியை அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரடியாக அழைத்து சாதனை சான்றிதழைப் பார்வையிட்டு பாராட்டியிருந்தார்.




# முறைப்பாடுகள் 3041 ஆக அதிகரிப்பு

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை 3041 ஆக அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி 08ஆம் திகதி முதல் நேற்று வரையான 24 மணித்தியாலங்களில் 178 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகளில் 172 முறைப்பாடுகள் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக கிடைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# 24 மணி நேரத்தில் 716 பேர் கைது

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 716 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 707 ஆண்களும் 09 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களில் 13 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன் போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 09 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கல்வித்துறையில் செயற்கை நுண்ணறிவு!

சைபர் சிம்மன்



பாடசாலை மாணவர்களின் கட்டுரைகளைத் திருத்தி, மதிப்பெண் அளிக்க ஆசிரியர்கள் செயற்கை நுண்ணறிவு சேவையைப் பயன்படுத்துவது தொடர்பாக அமெரிக்க நாளிதழான 'வால்ஸ்டிரீட் ஜர்னல்'லில் ஒரு கட்டுரை வெளியாகியுள்ளது. சாரா ராண்டசோ என்பவர் இந்தக் கட்டுரையை எழுதியுள்ளார்.

மாணவர்கள் ஏஐ சேவையைக் குறுக்குவழியாகப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கும் நிலையில், ஆசிரியர்கள் கட்டுரைகளைத் திருத்த ஏஐ மதிப்பீட்டுச் சேவையைப் பயன்படுத்தத் தொடங்கியிருப்பதால் கல்விச் சூழலில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் பற்றி அந்தக் கட்டுரையில் விவாதிக்கப்பட்டுள்ளது.


மாணவர்கள் எழுதும் கட்டுரைகள் உள்ளிட்ட ஆக்கங்களைத் திருத்தி, மதிப்பெண் அளிக்கும் திறன் கொண்ட ஏஐ சேவைகள் ஏற்கெனவே கல்வி நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகின்றன. வருங்காலத்தில் இவை இன்னும் பரவலாகலாம். விடைத்தாள்களை ஏஐ சேவை திருத்தி மதிப்பெண் அளிக்கும்போது, ஆசிரியர்களின் சுமை குறைந்து மாணவர்களுக்குக் கற்பிப்பதில் அவர்கள் அதிகக் கவனம் செலுத்தலாம் எனக் கல்வித் துறையில் ஏஐக்கு ஆதரவாகக் குரல்கள் ஒலிக்கின்றன.

ஆனால், இதனால் எழும் பிரச்சினைகளைத் தான் இந்தக் கட்டுரை சுட்டிக்காட்டியிருக்கிறது. ஏஐ மென்பொருள், ஆசிரியர்களைவிடக் கறாராகத் திருத்தி, குறைவான மதிப்பெண் அளிப்பதாகவும், சில நேரம் ஏஐ அளிக்கும் எதிர்வினை மிகவும் கடுமையாக இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏஐ மென்பொருளின் விமர்சனம், மாணவர்களின் பிஞ்சு உள்ளத்தைப் பாதிக்கும் வகையில் இருப்பதாக ஆசிரியர் ஒருவர் கூறியுள்ளார்.



### இயந்திரங்கள் புரிந்துகொள்ளுமா?

கட்டுரைகளைத் திருத்தும் ஆசிரியர்கள், மாணவர்கள் தங்கள் எழுத்துகளை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் கருத்துத் தெரிவிக்கின்றனர். ஆனால், அந்தப் பரிவும் புரிதலும் ஏஐ மென்பொருளின் இயந்திர அணுகுமுறையில் இல்லை என்பது பெருங்குறையாக அமைகிறது. இது போன்ற சேவை கண்டுபிடிக்கப்பட்டதே வன்முறை எனக் குறிப்பிட்டுள்ள ஓர் ஆசிரியர், "ஒருவரைச் சிறந்த எழுத்தாளராக உருவாக்கும் மனித அம்சத்தை இயந்திரங்கள் எப்படிப் புரிந்துகொள்ளும்?" எனக் கேள்வி எழுப்புகிறார்.



ஏஐ நிறுவனங்கள் இந்த விமர்சனங்களுக்கு அளித்துள்ள பதில் இரண்டு விதமாக இருக்கிறது. ஒன்று, இந்தச் சேவைகள் ஆசிரியர்களுக்கு மாற்று அல்ல என்பது. ஆசிரியர்கள் இந்தச் சேவைகளைப் பயன்படுத்தினாலும் இறுதி முடிவை அவர்கள் மேற்கொள்ளலாம், ஏஐ விமர்சனங்களையும் மிதமாக்கிக் கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளன.

இன்னொரு கருத்து, ஏஐ சேவைகள் இந்த அனுபவத்தில் இருந்து கற்றுக்கொண்டு மேலும் மேம்படும் எனத் தெரிவித்துள்ளன. ஏஐ சேவைகள் கற்றுக்கொண்டு மேம்படும் என்பது உண்மைதான் என்றாலும், வருங்காலத்தில் மாணவர்களின் ஆக்கங்களை இயந்திரங்கள் மதிப்பீடு செய்யும் நிலை பல்வேறு கேள்விகளை எழுப்பாமல் இல்லை.

### விவாதம் அவசியம்

"எதிர்காலத்தில் பள்ளியிலும் கல்லூரிகளிலும் மாணவர்கள் சிந்தித்துப் புரிந்துகொள்ளும் திறன் இல்லாமலேயே பட்டம் பெறத் தொடங்குவார்கள். மருத்துவர்கள் கணினியிடம் கேட்டு நோயாளிகளுக்கு மருந்து அளிப்பார்கள். எல்லாம் இயந்திரமயமாகும்" என ஒருவர் புலம்பியிருக்கிறார். இந்தக் கருத்துகளில் சில மிகையாக இருந்தாலும், கல்வித் துறை உள்ளிட்ட பல துறைகளில் ஏஐ சேவைகளின் தாக்கம் பற்றி விவாதிக்க வேண்டிய கட்டத்தில் நாம் இருப்பதை இவை உணர்த்துகின்றன.

மேற்கண்ட கட்டுரை குறிப்பிடுவதுபோல, ஆசிரியர்களைவிட ஏஐ சேவைகள் குறைவாக மதிப்பெண் அளித்து, கடுமையான விமர்சனங்களை அளிப்பதாக இருந்தால், மாணவர்களையும் அவர்களின் கற்கும் திறனையும் அது எந்த வகையில் பாதிக்கும் என்று யோசிக்க வேண்டும். இதன் பொருள், ஏஐ சேவைகளைப் பயன்படுத்தக் கூடாது என்பதல்ல. மாறாக, ஏஐ சேவையை உருவாக்கியது யார், அதன் நோக்கம் என்ன, அது எவ்வாறு செயல்படுகிறது என்பது போன்ற கேள்விகள் முக்கியமாகின்றன. எல்லாத் துறைகளிலும் ஏஐ சேவைகள் பயன்படுத்தப்படுவது தவிர்க்க இயலாதது. ஆனால், அதற்குத் தயாராக இருக்கிறோமா என்பது குறித்துச் சிந்திக்க வேண்டும்.

உதாரணமாக, ஏஐ மென்பொருள் மதிப்பெண்களை வழங்கும்போது எழக்கூடிய பிரச்சினைகளைப் பார்க்கலாம். முதலில், ஏஐ மென்பொருள் கொண்டு கட்டுரை திருத்தப்பட்டது எனத் தெரிவிப்பது ஆசிரியரின் கடமை ஆகிறது. அதே நேரத்தில், உங்கள் பிள்ளைக்கு இலக்கியம் வராது என்பதுபோல ஏஐ மென்பொருள் கருத்துத் தெரிவித்தால், அதைக் கேட்கும் பெற்றோர் மனம் எப்படி இருக்கும்? இது போன்ற கேள்விகளைத் தீவிரமாகப் பல தளங்களில் விவாதித்து, ஏஐ சேவைகளின் பயன்பாடு என்பது பயனுள்ளதாக அமைவதை உறுதிசெய்யத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு துறையிலும் ஏஐ பயன்பாடு இது போன்ற பல கேள்விகளை எழுப்புகிறது. இவற்றை அலட்சியம் செய்யாமல் விவாதிக்கவும் அதன் அடிப்படையில் அடுத்த நகர்வை மேற்கொள்ளவும் தயாராக வேண்டும்.

# மலையக மக்களின் ஆதரவு ரணிலுக்கே

## இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவிப்பு



"மலையக மக்கள் செய் நன்றி மறவாத சமூகம் என்ற வகையில் கஷ்டத்திலிருந்து எம்மை மீட்டெடுத்த தலைவருக்குப் பிரதி உபகாரம் செய்வதற்கு இப்போது வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது." – என்று இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்த குமார் தெரிவித்தார்.

ஹப்புத்தளையில் நேற்றுஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெற்ற 'ரணிலால் முடியும்' வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

"இதுவரையில் ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் நவக்கிரகங்களைப் போல் ஒவ்வொரு பக்கமாகத் திரும்பி நின்றோம். இன்று அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முடிந்திருக்கிறது.

மலையக மக்கள் காணியின்றி தவித்த யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான சட்ட திட்டங்களை ஜனாதிபதி தயாரித்திருக்கின்றார்.


அதனால் மலையக மக்களுக்கு வீட்டு உரிமையும் காணி உரிமையும் கிடைக்கப்போகும் நாட்கள் வெகுதூரத்தில் இல்லை என்பது அனைவருக்கும் தெரியும். கடந்த பொருளாதார நெருக்கடியால் சகல மக்களும் கஷ்டப்பட்டனர்.

இன்று 38 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். அவர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டுமே கல்விப்புலமையும், வலுவான சர்வதேச தொடர்புகளும் உள்ளன.

அதேபோல் நாட்டு மக்களும் அவருக்கு ஆதரவாக இருப்பதால் அவருக்கு அசுர பலம் கிடைத்திருக்கின்றது" என்றார்.



# அம்பாறையில் அரியநேத்திரனுக்கு இன்று வரவேற்பு



(வி.ரி. சகாதேவராஜா)

ஜனாதிபதி தமிழ் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரனுக்கு இன்று காலை செவ்வாய்க்கிழமை அம்பாறை மாவட்டத்தில் பெரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவருடன் முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மா நடராஜா உள்ளிட்டோரும் வருகை தந்திருந்தனர்.

முதலில் அம்பாறை மாவட்ட எல்லையில் உள்ள பெரிய நீலாவணையில் அவருக்கு பெரிய வரவேற்பளிக்கப்பட்டது.

தாயக செயலணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் இலங்கை தமிழரசுக்கட்சி கட்சியின் காரைதீவு பிரதேச தலைவருமான முன்னாள் தவிசாளர் கலாநிதி கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் பொன்னாடை போர்த்தி வரவேற்றார் .

ஏனைய தாயக செயலணி உறுப்பினர்கள் பொது கட்டமைப்பு உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள்.

அங்கே முருகன் கோயிலில் சிறப்பு பூஜை இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து கல்முனை காரைதீவு அக்கரைப்பற்று போன்ற பகுதிகளிலும் பெரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் தனது பிரசார நடவடிக்கைகளையும் அவர் இன்று ஆரம்பிததார்.



# தனியார் வாகனச் சாரதிகளுக்கு தேர்தல் ஆணைக்குழு எச்சரிக்கை

ஜனாதிபதி தேர்தல் காலப்பகுதியில், தேர்தல் விதிமுறைகளை மீறி தனியார் பஸ்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் ஏனைய தனியார் வாகனங்களில் ஒவ்வொரு வேட்பாளரையும் விளம்பரப்படுத்தும் படங்களுடன் கூடிய ஸ்டிக்கர்கள் மற்றும் கொடிகள் காட்சிப்படுத்தப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல் தொடர்பான சட்டத்தின் 74 வது பிரிவின் கீழ் இது குற்றமாகும் என ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி, வாகனங்களில் இதுபோன்ற ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டிருந்தால், அவற்றை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# நிந்தவூர் அல்-அஷ்ரக் மாணவன் தங்கப் பதக்கம் பெற்று சாதனை

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கிழக்குமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட மெய்வல்லுனர் போட்டி-2024இல் இரண்டாவது நாளான ஞாயிற்றுக் கிழமை நிந்தவூர் நிந்தவூர் அல்-அஷ்ரக் மாணவன் எம்.எச். முஹம்மது ஹின்ஸான் 12 வயது ஆண்கள் பிரிவில் 100ஆ ஓட்ட நிகழ்ச்சியில் 01ஆம் இடம் பெற்று (13.30ளுநஉ -2024) தங்கம் வென்றுள்ளார்.

பாடசாலையின் அதிபர் ஏ. அப்துல் கபூர், வெற்றி பெற்ற மாணவனை வாழ்த்துவதோடு, இதற்காக உழைத்த அனைத்து விளையாட்டு பொறுப்பாசிரியர்களுக்கும் இணைப் பாடவிதானத்துக்கு பொறுப்பாக இருந்து ஒருங்கிணைக்கும்உதவி அதிபர்கள்,மாணவனின் பெற்றோர்கள் உட்பட்ட கல்வி சார் மற்றும் சாரா சமூகத்தினருக்கு நன்றியைத் தெரிவித்துள்ளார்.




## தமிழரசுக்கட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், 'இந்த தேர்தலில் எங்களுடைய மக்கள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்ன அடிப்படையில் வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பிலும் அதற்காக எங்களுடைய கட்சி ரீதியான கொள்கை, எங்களுடைய இனப் பிரச்சினை தீர்வு, சமஷ்டி, சுயநிர்ணய அடிப்படையிலான தீர்மானங்கள், அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வேட்பாளராக உள்ள சஜித் பிரேமதாசாவின் கருத்துக்கள் தேர்தல் அறிக்கை விடயங்களையும் நாங்கள் கருத்தில் கொண்டு, அதில் எங்களுக்கும் அவருக்கும் இணக்கம் ஏற்படக்கூடிய விடயங்களை அடையாளப்படுத்தி நாங்கள் எதிர்வரும் 14 அல்லது 15ஆம் திகதிக்கு முன்னதாக எங்களால் தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கையை பொதுமக்களுக்காக வெளியிடவுள்ளோம்.

இந்த தேர்தல் தொடர்பில் கொள்கை அடிப்படையிலும் இனத்தின் விடுதலையை அடிப்படையாகவும் அதேவேளை சஜித் பிரேமதாசாவின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் சார்பாகவும் அது தொடர்பில் எங்களுடைய கருத்துக்கள் என்ன என்பது தொடர்பிலும் அந்த அறிக்கையை நாங்கள் வெளியிட இருக்கின்றோம். ஆகவே இந்த ஐவர் அடங்கிய குழு மீண்டும் கூடி அந்த அறிக்கையை வெளியிடுவோம்" என்று தெரிவித்தார். உங்களுடைய கட்சி சஜித் பிரேமதாசாவை தெரிவு செய்திருக்கின்ற நிலையில் நீங்கள் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற வேண்டும் என்று கூறுகின்றமை தமிழ் மக்களுக்கு மாறுபட்ட கருத்துக்களை சொல்வதாக இருக்காதா என ஊடகவியலாளர் கேட்டபோது, "நான் ஒருபோதும் மாறுபட்ட கருத்துக்களை கூறவில்லை. நான் ஆரம்பத்தில் நான் கட்சி கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அவர்களது தீர்மானத்திற்கான விளக்கம் எனக்கு என்ன என்று தேவைப்பட்டிருந்தது. ஆகவே அந்த நேரத்தில் சொன்ன கருத்து கட்சி எடுத்த தீர்மானத்தை நாங்கள் ஆராய்ந்து எவ்வாறு மக்கள் மத்தியில் முன்வைப்பது என்பது பற்றி தான் நான் சொல்லியிருந்தேன். வேறு ஒரு விதமான கருத்தை நான் சொல்லவில்லை" என்று தெரிவித்தார். 'கட்சியினுடைய கூட்டத்தில் நான் பங்கு பற்ற முடியாத நிலையில் வெளியிட்ட கருத்தை கட்சியுடன் பேசுவதற்கு நாங்கள் இன்றும் மூன்றாவது முறையாக கலந்துரையாடி இருக்கின்றோம். ஆகவே நாங்கள் இறுதி முடிவை எப்போது எடுப்போம் என்பது தான் முக்கியமானது. ஆகவே கட்சி எடுத்த தீர்மானத்திலும் இன்று நாங்கள் என்ன திருத்தங்களை மாற்றங்களை செய்ய வேண்டும் என்பது தொடர்பிலும் பேசியிருக்கிறோம். அதற்கு பொருத்தமான ஒரு அறிக்கை நாங்கள் வெளியிடுவோம்" என்று தெரிவித்தார். இதேவேளையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தமிழரசின் மத்திய குழுவின் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அது நடைபெறாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# சஜித்தின் தேர்தல் அலுவலகம் திறப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து கல்முனைத் தொகுதி சாய்ந்தமருதில் தேர்தல் செயற்பாட்டு காரியாலயம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை இரவு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகாரப் பணிப்பாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிபின் இல்ல வளாகத்தில் இக்காரியாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரகளான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், பைசால் காசிம், கட்சியின் தவிசாளர் ஏ.எல். அப்துல் மஜீத், கட்சியின் பொருளாளர் ரஹ்மத் மன்சூர், பிரதிச் செயலாளர் மன்சூர் ஏ. காதர், பிரதி தேசிய அமைப்பாளர் எம்.எஸ். உதுமாலெப்பை, , கட்சியின் உயர்பீட உறுப்பினர்களான எம்.ஐ. பிர்தௌஸ், ஏ.சி சமால்டீன் உட்பட சாய்ந்தமருது மத்திய குழு உறுப்பினர்கள், வட்டார அமைப்பாளர்கள், கட்சிப் பிரமுகர்கள், இளைஞர்கள் மற்றும் பெண்களும் கலந்து கொண்டனர்.

# கல்முனை அல் பஹ்ரியா மாணவர்கள் மூன்று தங்கங்களை வென்று சாதனை




(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட மெய்வல்லுனர் போட்டியில் 20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலய மாணவன் யூ.எல்.அஸ்ஜத் 57.6 செக்கனில் கடந்து புதிய சாதனையை ஏற்படுத்தி முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

அவர் தங்கப்பதக்கத்தினையும், 16 வயது ஆண்கள் பிரிவில் எம்.எம். றிஹான் 300 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் 42.9 செக்கனில் கடந்து புதிய மாகாண சாதனையுடன் முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும் பெற்றார்.

16 வயது பிரிவில் 4×100 மீற்றர் அஞ்சல் ஓட்ட போட்டியில் முதலிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தினையும், 20 வயது ஆண்கள் பிரிவில் 4×100 அஞ்சல் ஓட்ட போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் சுவீகரித்துக் கொண்டனர்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்





அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான முஸ்லிம் கலாசார போட்டிகளில் திறமைகளை வெளிக்காட்டி தேசிய மட்டத்தில் வெற்றி பெற்று சாதனை படைத்த அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மாணவர்களை பாராட்டி வரவேற்கும் நிகழ்வு நேற்று பாடசாலை வளாகத்தில் இடம் பெற்றது. (எம்.ஏ.றமீஸ்)

# அட்டாளைச்சேனையில் ரணிலின் தேர்தல் செயலகம் திறந்து வைப்பு



(நவாஸ்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்காக அட்டாளைச்சேனை பிரதேசத்தில் தேர்தல் காரியாலயம் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரபினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட பலரும் ஜனாதிபதியின் வெற்றிக்காக காத்திரமான உரைகளையும் நிகழ்த்தியிருந்தனர்.

காரியாலய திறப்பு நிகழ்வினை முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் தமீம் ஆப்தீன், இணைப்பாளர் எஸ்.எம்.அறூஸ், மத்திய குழுவின் செயலாளர் ஏ.எல்.கியாஸ்தீன், இளைஞர் அமைப்பாளர் அர்சாத் மற்றும் மத்திய குழு அங்கத்தவர்கள் பலரும் மிகவும் அர்ப்பணிப்புடன் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்

# கண்ணகி முதியோர் சங்கம் புனரமைப்பு



(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு 01 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட கண்ணகி முதியோர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் காரைதீவில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு அப்பிரிவின் கிராம உத்தியோகத்தர் எஸ். கஜேந்திரன் முதியோர்களுக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ் .மதிசுதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இதன்போது புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டதோடு, சங்கத்தினர் சங்க உறுப்பின ஒருவருக்கு வைத்திய தேவைக் கான ஒரு தொகை பணமும் வழங்கி வைக்கப்பட்டது. தலைவராக த.சிவானந்தராஜா (முன்னாள் இபோச உத்தியோகத்தர் ஊடகவியலாளர்) ,செயலாளராக இ.நடேச பிள்ளை (ஆடை வடிவமைப் பாளர்), பொருளாளராக த. வசந்தாதேவி மற்றும் ஆறு பேர் கொண்ட நிர்வாக சபையினரும் தெரிவு செய்யப்பட்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.09.2024இல் வெளியிடப்பெற்றது.